சேலம் –7, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – முனைவர்.வெ.கலைச்செல்வி ,எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்.,எம்.ஃபில்., எம்.ஃபில்.,எம்.பி.ஏ., பி.எச்டி.,
முதல்வர்

**ந.க.எண். 0786/டி/2025** **நாள். 15 .07.2025**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை–சேலம் –7, அரசு கலைக்கல்லூரி (த)–இளநிலை உதவியாளர் திருமதி.அ.சீதா –பணி வரன்முறை –ஆணை வழங்குதல்–தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணைய செயலரது கடித ந.க.எண்.1926/PSD –D2/2023 , நாள்.04.09.2023
2. சென்னை – 15 , கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35681/பி1/2023 நாள்:23–11–2023
3. இவ்வலுவலக முதல்வர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.2339/டி/2023, நாள்.28.11.2023
4. சென்னை – 15 , கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.TNDCE/4777/2025–B1, நாள்:26–06–2025

-----------

பார்வை (1)–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணைய செயலர் அவர்களின் கடிதத்தின் படி கல்லூரிக் கல்வித் துறைக்கு 2022–23–ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர் பதவிக்கு (வரிசை எண். 59) பார்வை (2)–ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி திருமதி.அ.சீதா என்பார் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு சேலம்–7 , அரசு கலைக் கல்லூரிக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டு பார்வை (3)–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின் படி அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியல் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. அதன் படி அன்னார் 30.11.2023 அன்று முற்பகல் முதல் பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை (4)–ல் காணும் கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தின் படி கல்லூரிக் கல்வித் துறைக்கு தெரிவு செய்யப்பட்டு பணி புரியும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள்/ சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை III ) ஆகியோருக்கு பார்வை (1)–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் (Conditional PSTM / ST / PWD/ Phy. Challenged) தமிழ் நாடு அமைச்சுப் பணி விதி 10–ன் கீழ் கல்லூரி முதல்வர்களே நியமன அதிகாரி என்பதால் கல்லூரி முதல்வர் அளவிலேயே சார்ந்த பணியாளர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே திருமதி.அ.சீதா என்பாரது கல்விச் சான்றிதழ்களின் உண்மை தன்மை பெறப்பட்டுள்ளது மேலும் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்பதால் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 30.11.2023 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

15/7/25

முதல்வர்,
அரசு கலைக் கல்லூரி(த),
சேலம் – 7.

பெறுநர் :
திருமதி.அ.சீதா ,
இளநிலை உதவியாளர்,
அரசு கலைக்கல்லூரி (த), சேலம்–7.

நகல் :
1. கல்லூரிக் கல்வி ஆணையர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சைதாப்பேட்டை, சென்னை–15.
2. கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்,
கல்லூரிக்கல்வி இணை இயக்ககம்,
தருமபுரி மண்டலம், தருமபுரி–636 705.

(1, 2) தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது

3. உபரி–2